செ.வெ.எண்.46 நாள்: 24.06.2020

# தூத்துக்குடி மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டை பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு கோவிட் - 19 நிவாரண உதவித்தொகை ரூ.1000 கிராம நிர்வாக அலுவலர் மூலம் நேரில் வழங்கப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

கொரோனா வைரஸ் (கோவிட் -19) நோய் தொற்று பரவலினை தடுக்க தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதனை தடுக்கும் விதமாக ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு, இக்காலங்களில் ஏழை எளிய மக்களுக்கு தேவையான நிவாரணம் வழங்கியும், பொருளாதார மீட்பு நடவடிக்கையினை மேற்கொண்டும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

தற்போது 30.06.2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ள இவ்வூரடங்கு காலத்தில் மாற்றுத்திறனாளிகள் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெற்றுள்ள 13.35 இலட்சம் மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1000/- ரொக்க நிவாரணத்தினை அவர்கள் வீட்டிலேயே வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதன் அடிப்படையில் தூத்துக்குடி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் தங்கள் அசல் தேசிய அடையாள அட்டை காண்பித்தும் அதன் நகலினை நிவாரணத் தொகை வழங்கும் கிராம நிர்வாக அலுவலரிடம் சமர்ப்பித்து நிவாரணத்தொகை ரூ.1000/- பெற்றுக்கொள்ளலாம். முன்னதாக விநியோகப்படிவம் பூர்த்தி செய்ய தேவையான விவரங்களை மாற்றுத்திறனாளிகள் அளிக்க வேண்டும். அளிக்கப்படவேண்டிய விபரங்கள்: தனிநபர் சம்மந்தப்பட்ட விவரம், கல்வித்தகுதி, வேலைவாய்ப்பு, அடையாள அட்டை மற்றும் UDID விண்ணப்ப நிலை ஆகியவையாகும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு இந்த நிவாரண உதவி தொகை 26.06.2020 முதல் 02.07.2020 வரை காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை பயனாளிகளின் இருப்பிடத்திற்கே நேரில் சென்று வழங்கப்படும். தங்கள் பகுதிக்கு உட்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் விண்ணப்ப படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.